காக்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு என்றென்றும் விவசாயிகளின் துயர் துடைக்கும் அரசாகவே விளங்கி வருகிறது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத் தொகை, மக்காச்சோளப் பயிரினை சாகுபடி செய்து, இப்புழுவின் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ள சிறு, குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, ஏற்கெனவே பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து இப்புழுவினால் பாதிப்படைந்த மக்காச்சோள விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையினையும் பெற்றுத் தர வேளாண்மைத் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இதுவரை சேராத வேளாண் பெருமக்களும், எதிர்வரும் காலத்தில் இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பொருளாதார ரீதியாக தங்களை பாதுகாத்துக்கொள்ள உடனடியாக இத்திட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு இத்தருணத்தில் அன்புடன் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. வேளாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானும் ஒரு விவசாயியாக இருந்து, விவசாயிகளின் நிலையை உணர்ந்து, எப்போதும் விவசாயிகளின் துயர் துடைக்கும் காவலனாக கழனி மாடு உழவர்களின் தோழனாக இருந்து, இன்முகத்துடன் நல்லாட்சி செய்து வரும், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் வணக்கத்திற்குரிய அண்ணன் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2018-2019 ஆம் ஆண்டில் தமிழக விவசாயிகள் மக்காச்சோளத்தைப் பயிரிட்டு, படைப்புழு தாக்குதலால் பாதிப்புற்று, துவண்டுபோன நிலையினைக் கண்டு, கண்ணும்கருத்துமாக அதனைக் கண்காணித்து, இன்னலடையும் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு

ஏதுவாக, 'துவண்டுவிடாதே, நான் இருக்கிறேன்' என துடிப்புடன் செயல்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.186 கோடியே 25 இலட்சத்தை நிவாரணமாக வழங்கி, விதி எண் 110-ன்கீழ் அறிவிப்பு செய்தமைக்காக தமிழக வேளாண்மைத் துறை சார்பாகவும், தமிழக விவசாயப் பெருமக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றிகளை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இதுபோன்று நோய் தாக்கப்படுகின்றபோது, மக்காச்சோளத்திற்கென்று நிவாரணம் வழங்குகின்ற மரபு இல்லாமல் இருந்தது. விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்கி, விதியை, இன்றைக்கு மாற்றியமைத்து விவசாயிகளுடைய தலைவிதியை மாற்றிக் காட்டிய, விவசாயிகளுடைய பாதுகாவலராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த அவையின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 18-7-2019 அன்று பேரவையில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 29-சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு, (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) ஆகியவை 24-7-2019 அன்றும், 24-7-2019 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) ஆகியன 18-7-2019 அன்றும், பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக்கொள்ளப்படும்.